1980 ஜூலை, 21]

திரு. சு. பாலன்: பதவிக்குத் தகுதியான ஆள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள். அப்படியானால் எந்தெந்த பதவிகள் காலியாக இருக்கின்றன என்பதை பத்திரிகைகள் மூலம் விளம்பரப் படுத்தி, தகுதியானவர்களைத் தேர்வு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவரவர்களே, சென்ற ஆண்டு நிரப்பப்படாத இடங்கள் இந்த ஆண்டு நிரப்பப் படுவதற்காக 'கால் ஃபார்' பண்ணப்பட்டு முறையாக இன்டர் வியூ நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : கனம் சபாநாயகர் அவர்களே, எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் Qualiffied candidates are available என்று ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் Qualified candidates are not available என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் எது சரி. Qualified candidates are available among scheduled castes and scheduled tribes என்று எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் சொல்வது சரியா? அல்லது Qualified candidates are not available among scheduled castes and scheduled tribes என்று அமைச்சர் சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, காலி இடங்கள் ஏற்படும்போது அவற்றுக்கு 'கால்' ஃபார் செய் யப்பட்டு, நேர்முகத் தேர்வு அல்லது எழுத்துப் பரீட்சை (எக்சாமி னேஷன்) மூலம் தேர்வு செய்கிறார்கள். தேர்வு செய்யப்படும் போது ஒவ்வொரு பதவிக்கும் சில வரன்முறைகளை வைக்கிறார் கள். அதன்படி தகுதியுள்ளவர்களைத் தேர்வு செய்கிறார்கள். இல்லை என்றால் தேர்வு செய்யாமல் விட்டு விடுகிறார்கள். தகுதியுள்ள நபர்கள் கிடைக்காத காரணத்தால் இருக்கக்கூடிய இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதை அப்படியே காலியாக வைத்து, அடுத்த ஆண்டு 'கால்ஃபார்' பண்ணி தகுதியானவர்களைத் தேர்வு செய்து நிரப்புகிறார்கள்.

சிங்களேயர்புரியிலுள்ள அரசு மருத்துவமனை.

* கு.கா.வி.எண். 31—

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்ற ஆண்டு முதல் அரசு ஏற்று நடத்தும் நாகர் கோவில் தொகுதியைச் சார்ந்த சிங்களேயர்புரி மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன?

(ஆ) படுக்கைகளை அதிகரிக்கும் உத்தேசம் அரசிடம் உண்டா?

(இ) அங்கு எக்ஸ்ரே கருவிகள் Blood Bank ஆகியவை கள் நிறுவ அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்சமயம் நாகர் கோவில் தொகுதியைச் சார்ந்த சிங்களேயர்புரியில் ஒரு மருந்தகம்தான் உண்டு. அதில் படுக்கை வசதிகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) அம் மருத்துவமனையில் உள்நோயாளிகள் சிகிச்சை பெற வசதிகள் இல்லாததால், எக்ஸ்ரே, குருதி சேமிப்பு வங்கி முதலியன ஏற்படுத்துவது தற்சமயம் அவசியமானதல்ல எனக் கருதப்படுகிறது.

[முற்பகல் 9-40]

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, சுமார் 1 இலட்சம் கிராம மக்கள் பயனடைகிற அளவில் பல கிராமங்கள் சூழ்ந்துள்ள பகுதியாக இருப்பதால் இந்த மருத்துவமனைக்குப் படுக்கை வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா? மேலும் இங்கே ஒரே டாக்டர் தான் இருக்கிறார். கூடுதலாக டாக்டர்களைப் போட்டு மேலும் நல்ல முறையில் கிராம மக்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, சிங்களேயர்புரி என்ற அந்த ஊர் நாகர்கோவிலிலிருந்து 6 மைல் தூரத்தில் இருக்கிறது. நாகர்கோவிலிலே இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் 253 படுக்கைகள் இருக்கின்றன. மேலும் பல வசதிகள் அங்கு இருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற வசதிகள் எல்லாம் அங்கு இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலே இதை மீண்டும் பரிசீலனை செய்து 4 படுக்கைகளை அங்கு ஏற்படுத்த முடியுமா என்பதை அரசு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி ; தலைவரவர்களே, நாகர்கோவில் தொகுதியில் தலைமை மருத்துவமனையில் 36 படுக்கைகளுக்குத் தேவையான இடம் கட்டப்பட்டும்அதற்கு வேண்டியபடுக்கைகள் இல்லாத காரணத்தால் அங்கு ஒரு அவலமான சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அங்கு அவசியமான படுக்கைகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்திலேயே இதைப்பற்றி எடுத்துக் கூறி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது குறித்து நான் ஏற்கெனவே விசாரித்து அங்கு 10, 12 படுக்கைகள்தான் நிரப்பப்படாமல் இருப்பதை அறிந்து துரிதமாக எல்லாப் படுக்கைகளையும் அங்கு ஏற்படுத்தி

1980 ஜூலை 21],

அது சரியான வகையிலே இயங்குகின்ற வகையிலே உத்தரவு போட்டாகி விட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப்பிரச்னை.

பாசனத் துறை அமைச்சர் மீது (தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 247-வது விதியின் கீழ், 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று நெல்லிக்குப்பம் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. துரை முருகன் அவர்களும் மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பிறகு, எனது தீர்ப்பைப் பின்னர் அறிவிப்பதாகத் தெரிவித்திருந்தேன். சம்பந்தப்பட்ட அவைக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு இன்று எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் நாள் அன்று பேரவையில் ஒரு துணை வினாவிற்கு விடை அளிக்கையில், மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீரைப் பங்கிடுவது குறித்துத் தமிழக அரசு அலுவலர்களுக்கும் கேரள அரசு அலுவலர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்ததாகக் குறிப்பிட்டது, கேரள அமைச்சரால் மறுக்கப் பட்டுள்ளபடியால், வேண்டுமென்றே பேரவைக்குத் தவறான தகவல் தரப்பட்டுள்ளது என்றும், எனவே இது அவை உரிமை மீறிய செயல் என்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் திரு. துரைமுருகன் அவர்களும் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று அறிவிப்புக் கொடுத்துப் பேரவையில் உரிமை மீறல் பிரச்சனையை எழுப்பினார்கள். இதற்கு விரிவாக விளக்கம் அளித்த மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:—

" புதிதாக நாங்கள் ஆட்சிக்கு இப்போது வந்த பிறகு 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் தேதி பதவி ஏற்பு நடந்ததற்குப் பிறகு இரண்டு கட்டத்திலே இது குறித்துப் பேச்சு